ஏப்ரல் 2014 (ம) மே 2014 – ஆம் மாதத்திற்கான சம்பளம் வழங்கும் அதிகாரம் (Pay authorization for the months of April & May 2014)

பள்ளிக் கல்வித் துறை,
தலைமைச்செயலகம்,
சென்னை–600 009

**கடித எண். 15421 /பக5(1)/2014–1, நாள் 13.05.2014**

அனுப்புநர்
திருமதி த.சபிதா இ.ஆ.ப.,
அரசு முதன்மைச் செயலாளர்

பெறுநர்
மாநிலக் கணக்காயர், சென்னை–18.
கருவூல கணக்கு ஆணையர், சென்னை–15.
சம்பளக் கணக்கு அலுவலர் (கிழக்கு), சென்னை–8.
சம்பளக் கணக்கு அலுவலர் (தெற்கு), சென்னை–35.
சம்பளக் கணக்கு அலுவலர் (வடக்கு), சென்னை–1.
சம்பளக் கணக்கு அலுவலர், மதுரை.
சார் சம்பளக் கணக்கு அலுவலர்,
சென்னை மாநகராட்சி, சென்னை–3.
அனைத்து மாவட்டக் கருவூல/ சார் கருவூல அலுவலர்கள்.

ஐயா,

பொருள்: பள்ளிக்கல்வி – தற்காலிகப் பணியிடங்கள்– 790 பட்டதாரி மற்றும் முதுகலைப் பட்டதாரி ஆசிரியர் தற்காலிக பணியிடங்கள் 31.12.2013 வரை தொடர் நீட்டிப்பு காலம் வழங்கப்பட்டது – 01.01.2014 முதல் 5 ஆண்டுகள் தொடர் நீட்டிப்பு ஆணை கோரி கருத்துரு பெறப்பட்டுள்ளது – ஏப்ரல் மற்றும் மே 2014 ஆம் மாதங்களுக்கான சம்பளம் வழங்க அதிகார ஆணை (Pay Authorization) வழங்குதல் – சார்ந்து..

பார்வை 1. அரசாணை(1டி)எண்.143, பள்ளிக்கல்வி[பக5(1)]த்துறை, நாள். 27.05.2013.
2. பள்ளிக்கல்வி இயக்குநரின் கடித ந.க.எண். 093035/L/E3/2013 நாள் 07.05.2014

------

பார்வை 1ல் காணும் அரசாணையில் 2008–09 மற்றும் 2009–10–ஆம் கல்வி ஆண்டுகளில் பல்வேறு அரசாணைகளில் நிலை உயர்த்தப்பட்ட உயர்நிலை/ மேல்நிலைப் பள்ளிகளுக்கு புதிதாக தோற்றுவிக்கப்பட்ட 790 ஆசிரியர் தற்காலிக பணியிடங்களுக்கு 31.12.2013 வரை தொடர் நீட்டிப்பு வழங்கப்பட்டுள்ளது. மேற்காணும் தற்காலிக பணியிடத்திற்கு 01.01.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த கருத்துரு பள்ளிக் கல்வி இயக்குநரால் அனுப்பப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

2. மேற்காணும், 790 பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்கள் தற்காலிக பணியிடத்திற்கு 01.01.2014 முதல் மேலும் 5 ஆண்டுகளுக்கு தொடர் நீட்டிப்பு வழங்கிட காலதாமதம் ஏற்படும் நிலையில் துறைத்தலைவருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரத்தின் அடிப்படையில் ஜனவரி, பிப்ரவரி, மார்ச், ஆகிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் பள்ளிக் கல்வி இயக்குநரால் விரைவு ஊதிய ஆணை வழங்கப்பட்டுள்ளது. தற்போது ஏப்ரல் 2014 முதல் ஜுன் 2014 முடிய மூன்று மாதங்களுக்கு ஊதியம் பெறத்தக்க வகையில் சம்பளம் வழங்க அதிகாரம் (Pay Authorization) வழங்குமாறு பள்ளிக் கல்வி இயக்குநர் கருத்துரு அனுப்பியுள்ளார்.

3. தொடர் நீட்டிப்பு வழங்குவது குறித்த பள்ளிக் கல்வி இயக்குநரின் கருத்துரு, அரசின் பரிசீலனையில் உள்ளதால், 790 பட்டதாரி மற்றும் முதுகலை ஆசிரியர்கள் தற்காலிக பணியிடங்களுக்கு சம்பளம் மற்றும் இதர படிகளுக்கான ஊதியம், உரிய அலுவலர்களால் தாக்கல் செய்யப்படும் ஏப்ரல் மற்றும் மே 2014 மாதங்களுக்கான சம்பளப் பட்டிகளை அவை ஏனைய இனங்களில் சரியாக இருக்கும் நிலையில் ஏற்றுக் கொண்டு சம்பளம் அனுமதிக்குமாறு தங்களை கேட்டுக் கொள்ளப் பணிக்கப்பட்டுள்ளேன்.

4. இக்கடிதம் நிதித்துறையின் அ.சா.எண்.168/JS(RSM)/Edn-II/2014, நாள் : 13.05.2014–ல் பெற்ற ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

தங்கள் நம்பிக்கையுள்ள

13/5/14

அரசு முதன்மைச் செயலாளருக்காக

**நகல்**

பள்ளிக்கல்வி இயக்குநர், சென்னை–6
நிதி(கல்வி–II)துறை , சென்னை–9,
பள்ளிக்கல்வி (மேநிக)துறை,சென்னை–9.
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்

ந.க. எண் 093035/எச்/இ3/2013 நாள் 14.05.2014.

நகல் அனுப்பப்படுகிறது.

Director of School Education
Chennai-600 006

பெறுநர்
அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள்
மற்றும் மாவட்டக் கல்வி அலுவலர்கள்

14/5/14